2022 ஏப்ரல் 21]

(ஆ) திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், அடிப்படை வசதிகள் செய்தல் மற்றும் அன்னதானம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் அடிப்படை வசதிகள் மற்றும் முழு நேரமும் அன்னதானம் வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், விதி எண் 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், அருள்மிகு காந்திமதி அம்மாள் திருக்கோயிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்தும், முழுநேர அன்னதானம் வழங்குவது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையப்பர் திருக்கோயிலில் நெல்லையப்பர் மற்றும் மூலஸ்தானத்தில் கோவிந்தர் மற்றும் காந்திமதியம்மன் ஆகிய சந்நிதிகள் உள்ளன. இத்திருக்கோயிலில், ஏற்கெனவே தினந்தோறும் 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலுக்கு தினந்தோறும் ஆயிரம் பக்தர்கள்தான் வருகின்றார்கள். இன்று, இந்தக் கவன ஈர்ப்பு வந்திருப்பதைப் பார்த்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காலையில் என்னை அழைத்து, பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் அவர்கள் அன்னதானம் வழங்க வேண்டுமென்றுதானே கேட்கிறார்; தாராளமாக வழங்கலாமே என்று எனக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார். அந்த வகையில், அத்திருக்கோயிலைப் பற்றிக் கேட்கின்றபோது, 9 உற்சவங்கள் நடைபெறுகின்றன.

ஆனி மாதம் தொடங்கினால் பிரம்ம உற்சவம், ஆனி மாதத்தைத் தொடர்ந்து ஆடி மாதம் தொடங்கினால் மூல நட்சத்திர திருவிழா, ஆனி மாதத்தைத் தொடர்ந்து ஆவணி மாதம் தொடங்கினால் முளைக்கட்டுதல், அதற்குப் பிறகு தை மற்றும் மாசி மாதங்களில் தெப்பத் திருவிழா போன்று 9 நிகழ்வுகள் நடைபெறுகின்றன. 9 நிகழ்வுகள் நடைபெறுகின்ற அந்தக் காலங்களில், ஒவ்வொரு திருவிழாவின்போதும் கூடுதலாக 500 பக்தர்களுக்கு குறைவில்லாமல் அன்னதானம் வழங்கி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முழுமையாக நிறைவேற்றுங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். ஆகவே, 9 திருவிழாக்களில் கூடுதலாக 100 பக்தர்கள் என்பதற்குப் பதிலாக 500 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். இன்னொரு கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார். அதாவது, அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். 9 பணிகள் ரூ.30 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில், முதல் பணியாக, கடந்த ஆண்டு நீங்கள் வைத்த கோரிக்கையான இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 30–ன்படி, ரூ.13 கோடியே 50 இலட்சம் செலவில், மூத்த குடிமக்களுக்கான உண்டு, உறைவிட கட்டடத்தைக் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதோடு, யானைகளுக்கு குளியல் தொட்டிகள், திருக்குளம் காலணி பாதுகாப்பு, பக்தர்கள் தங்களுடைய பொருட்களை வைப்பதற்கான பாதுகாப்பு அறை, தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள அம்மன் திருக்கோயில் அருகில் சிதிலம் அடைந்திருக்கின்றது. அந்தச் சிதிலத்தைச் சரிசெய்யும் அளவிற்கு ஒன்றரை கோடி ரூபாய் செலவில் திருப்பணி. மேலும் அங்கு அமைந்திருக்கின்ற கருஉருமாறி திருக்குளத்தைச் செப்பனிடும் பணிக்கு சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அம்மனுடைய மேல்பிரகாரம் பழுதடைந்திருக்கின்றது. அந்த பிரகாரத்திற்கு தட்டோடு போடுதல் போன்ற 9 திருப்பணிகளுக்கு நீங்கள் கேட்காமலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.30 கோடிக்கு அனுமதி தந்திருக்கின்றார்கள். எனவே, அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தையும் நிறைவேற்றும் விதமாக, இந்து சமய அறநிலையத் துறை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்

2022 ஏப்ரல் 21] [திரு. பி.கே. சேகர்பாபு]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி, கல்விக் கட்டணத்தைக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. ந. தளவாய் சுந்தரம், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. தி. வேல்முருகன் மற்றும் திரு. கு. செல்வபெருந்தகை ஆகியோர் ஏற்கெனவே அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். மேலும், இன்று காலையில், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. K.A. பாண்டியன், திரு. ஆ. அருண்மொழிதேவன் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோரும் இதுகுறித்து என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். எனவே, மேற்கண்ட உறுப்பினர்களில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். எல்லோருடைய சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவொரு முக்கியமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், Agenda–வில் இருப்பதை மட்டும் நீங்கள் வாசியுங்கள். இன்னும், இரண்டு கேள்விகள் கேட்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி கல்விக் கட்டணத்தைக் குறைப்பது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.